


▲ தீபாவளியை முன்னிட்டு சென்னை கோயம்பேடு மார்க்கத்தில் செல்லும் மெட்ரோ ரயில்களில், பயணிகளைக் கவரும் வகையில் வண்ணக் கோலங்கள், விளக்குகள் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன.

படங்கள்: ம.பிரபு

## தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மெட்ரோ ரயிலில்

# வண்ண ஓவியங்களால் உள் அலங்காரம்

■ சென்னை

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, சென்னை மெட்ரோ ரயில் பெட்டிகளில் அழகிய வண்ண ஓவியங்களால் உள் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. இது பயணிகளின் கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் பயணிகளை கவர்வதற்காக பல்வேறு புதுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், தற்போது மேலும் ஒரு புதுமையை மெட்ரோ ரயில் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, வண்ணமயமான தீபாவளி என்ற கருத்தின் அடிப்படையில், மெட்ரோ ரயில் பெட்டிகளில் உள் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி, பயணிகளின் இருக்கை, ரயில் பெட்டியின் பக்கவாட்டு மற்றும் தரையில் அழகான வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. அதேபோல், நுழைவு வாயிலின் இருபுறமும் உள்ள கண்ணாடி தடுப்புகளிலும் அழகான ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. மேலும், இனிய தீபாவளி வாழ்த்துகள் என்ற வாசகம் இடம் பெற்றுள்ள ஓவியங்களும் ரயில் பெட்டிக்குள் வைக்கப்பட்டுள்ளன.

15 மெட்ரோ ரயில்களில் இந்த உள்அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. இந்த ரயில்கள் விமான நிலையம்-டிஎம்எஸ் மற்றும் செயின்ட் தாமஸ் மவுன்ட்-சென்னை சென்ட்ரல் வழித்தடங்களில் நேற்று முதல் இயக்கப்படுகிறது. மெட்ரோ நிறுவன செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.